உலக நாடுகள் வரிசை 7



# பீஜித்தீவுகள்

'சோமலெ'

உலக நாடுகள் வரிசை—7.

# பீஜித் தீவுகள்

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு: 1960
திருத்திய இரண்டாம் பதிப்பு: 1965
உரிமை ஆசிரியர்க்கே

விலை 60 காசு

Library Classification. Dewey Decimal No: 919·611

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

ஆசிரியர் 1948-இல் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு, பீஜி வழியாகச் சென்ருர்.

பசிபிக் தீவுகளான பீஜி ஒரு சிறிய இந்தியா. சர்க்கரை ஆலேகளில் அலுவல் பார்க்கச் சென்ற தொழிலாளர்கள் விரைவில் இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஆகிவிடுவர். இந்த நாட்டை யாரிடம் ஒப்புவிப்பது என்று பீஜித் தலைவர்கள் ஒரு காலத்தில் தடுமாறினராம். இப்போது சில தொழில்கள் பெருகியுள்ளன. தமிழ் நாட்டுத் தொடர்பைக் குறிக்கும் பல சொற்கள் இங்கு வழங்குகின்றன. இந்தியரின் நிலைமையையும் குச்சிபோல நிற்கும் தலைமயிருள்ள பீஜியரின் வேடிக்கையான பழக்க வழக்கங்களையும் சகுனம் சாத்திரங்களையும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பிடுகிருர்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பசிபிக் பெருங்கடல் | 5 |
| 2. | வரலாறு | 8 |
| 3. | நாடும் மக்களும் | 10 |
| 4. | இந்தியர் | 13 |
| 5. | பீஜீயர் | 18 |
| 6. | தொழில் | 23 |
| 7. | மொழி | 26 |
| 8. | கல்வி | 26 |
| 9. | அரசியல் நிலை | 27 |
| 10. | பல்சுவை | 30 |
| 11. | பிற்சேர்க்கை | 31 |
| | பசிபிக்கின் அரசியல்நிலை | 28-29 |

# 1. பசிபிக் பெருங்கடல்

நிலப் பரப்பும் நீர்ப் பரப்பும் சேர்ந்தது உலகம். நிலப் பரப்பைவிட நீர்ப் பரப்பே அதிகம். நீர்ப் பரப்பு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பெருங்கடல்கள் என்று பெயர் பெற்றிருக்கிறது.

பெருங்கடலுக்குள் பெரியது பசிபிக். மற்ற எல்லாப் பெருங்கடல்களையும்விட ஆழமாகவும் இருக்கிறது. அதன் அகலம் 8,000 கிலோமீட்டர் (5,000மைல்;) அது ஆஸ்திரேலியாவை அமெரிக்காவினின்றும் பிரிக்கிறது; அல்லது அவற்றை இணைக்கிறது என்றும் சொல்லலாம்.

பசிபிக் முழுவதும் வெறும் கடல்நீர் அல்ல. ஆயிரக் கணக்கான சிறு தீவுகள் அங்கே உள்ளன. படத்தில் இவை சிறு சிறு புள்ளிகளாகத் தெரியும்.

பசிபிக் தீவுகளில் எப்போதும் வேனிற்காலமாக இருக்கிறது. கறுப்பு இனத்தவரும் — பொலினீசிய, மெலனீசிய மக்களும் ஆசிய நாடுகளிலிருந்து குடியேறிய வரும் ஐரோப்பிய பாதிரிமார்களும்-ஆங்காங்கே குடியிருக்கின்றனர். பனை மரங்களும் பவழம் நிறைந்த

கரையும் பசிபிக் எங்கும் உள்ளன. தேங்காயும் கொக்கோவும் இத்தீவுகளின் விளைபொருள்கள்.

16-ஆம் நூற்றாண்டில்தான் பசிபிக் பெருங்கடல் உலகினர் கண்ணுக்குப் புலனாயிற்று. 1768 முதல் 1779வரை காப்டன் குக் என்பார் இப்பகுதி முழுவதையும் துருவி ஆராய்ந்தார்.


1941 முதல் 1945 வரை ஜப்பானுடன் அமெரிக்காவும் பிரிட்டனும் போர் நடத்தியபோது, பசிபிக் தீவுகளைப் பற்றி எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தீவுகள் போர்க்காலத்தில் மிகவும் முக்கியமான தளங்களாக இருந்தன. விமானப் படைகளுக்கும் கப்பல் படைகளுக்கும் இவை கேந்திரமான இடங்களாக அமைந்துள்ளன.

பசிபிக் பெருங்கடலுக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. சில தீவுகளில் சனிக்கிழமையாக இருக்கும்போது வேறு சில தீவுகளில் ஞாயிற்றுக் கிழமையாக இருக்கும். நாள் வேறுபாட்டைக் காட்டும் கற்பனைக் கோடு (International Date Line) பசிபிக் வழியேதான் செல்லுகிறது.

பசிபிக் தீவுகளின் நிகழ்ச்சிகள் உலகைப் பாதிக்கின்றன. ஒதுப்புறமாகவும் பிற்பட்ட நிலையிலும் வாழ்ந்த மக்கள் வீறிட்டு எழுச்சியடைந்து வருகின்றனர். அந்தத் தீவுகளிலுள்ள மக்கள் ஆசியராகவும் ஆளுவோர் ஐரோப்பிய நாட்டினராகவும் உள்ளனர். இதனால் அரசியல் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

பசிபிக்கின் நிலையை நன்கு அறிய பல கோடி ரூபாய் செலவில் 'இன்ஸ்டிடியூட் ஆப் பசிபிக் ரிலேசன்ஸ்' என்ற நிறுவனம் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஹாலந்து, இந்தியா ஆகிய நாடுகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**ஏனெனின், பழைய காலத்தை அறிய மத்தியதரைக்கடல் முக்கியமாக இருந்தது; இக்காலத்தை உணர அட்லாண்டிக் பெருங்கடல் பற்றிய அறிவு வேண்டும்; வருங்காலத்தைப் புரிந்துகொள்ள, பசிபிக் பெருங்கடல் பகுதியின் பிரச்னைகளைக் கூர்ந்து ஆராய்ந்தாக வேண்டும்.**




ஆஸ்திரேலியத் துறைமுகங்களும்
பசிபிக் பெருங்கடலின் தென்பகுதியிலுள்ள சில தீவுகளும்

ஹவாய், பீஜி, நியு கினியா, நியு ஹெபிரிடிஸ், சாலமன், டொங்கா, சமோவா, கில்பர்ட், கான்டன் முதலிய பல தீவுகள் பசிபிக்கில் உள்ளன. ஆனால் இந்தியராகிய நமக்கு இவற்றில் பீஜிதான் முக்கியமானது.

## 2. வரலாறு

பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுகளை மெலனீசியா, மைக்ரோனேசியா, பொலனீசியா என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

இவற்றுள் மெலனீசியா என்பது பாப்புவன் இனத்தவரும் நீக்ரோ இனத்தவரும் பெரும்பான்மையோராக வாழும் தீவுக்கூட்டம். இவர்கள் மிகவும் கறுப்பானவர்கள். பொலினீசியாத் தீவுக்கூட்டத்தில் உயர்ந்த தோற்றமுள்ள படகோட்டிகள் வாழ்ந்து வருகின்றனர். ஒரே மொழியின் கிளை மொழிகளைப் பேசுகின்றனர். மைக்ரோனேசியாவில் மலாயா நாட்டிலும் பிற இடங்களிலுமிருந்து குடியேறிய அடிமைகளே பெரும்பான்மையாக உள்ளனர்.

மெலனீசியாவிலுள்ள தீவுகளுள் ஒன்று பீஜி.

பீஜியின் வரலாறு சுருக்கமானது. இந்தத் தீவுகள் புதுநாடு காணும் ஆர்வத்தால் தூண்டப் பெற்ற டச்சுக்காரராகிய டாஸ்மன் என்பவரால் 1643-இல் கண்டு பிடிக்கப்பட்டன. அதற்குப்பின் ஒரு நூற்றாண்டு கழித்து காப்டன் குக் இங்கு வந்து சேர்ந்தார்.

1790 முதல் 1840 வரை ஐரோப்பியர் பலர் பீஜித் தீவுகளுக்கு வந்த வண்ணமாக இருந்தனர். இங்கே வாழ்ந்த பீஜிய மக்கள் அப்போது கோபக் கனலோடும் போர் மனப்பான்மையுடனும் இருந்தனர். எனினும், 1830 அளவில் இங்கு வந்த மதப் பிரசாரகர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி அவர்களுடன் பழகி ஆற அமரத் தங்கள் கருத்துக்களைப் பரப்பியும் கொள்கைகளைப் புகுத்

தியும் நாகரிகத்தை நிலைநாட்டியும் நிலைத்துவிட்டனர். பீஜியரின் சமூகத் தலைவரான ஒருவரை—அரசர் என்ற பட்டம் பெற்றிருந்த ககோபாவு என்பவரை—1854-இல் கிறித்தவ சமயத்தினராக ஆக்கினர். அதன் விளைவாக, பீஜியில் மேற்கத்திய நாகரிகம் வேரூன்றிற்று.

பிரிட்டனாவது அமெரிக்காவாவது தன் நாட்டை ஆள வேண்டும் என்று பீஜித் தலைவர் கேட்டுக்கொண்டார். தங்கள் நாட்டுக்கு அருகேயுள்ள இத்தீவில் பிரிட்டிஷ் ஆட்சியிருப்பதே தங்களுக்கு நலம் என்று ஆஸ்திரேலிய மக்கள் கருதினர்; அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பீஜித் தீவை, தங்களுடைய குடியேற்ற நாடாக ஆக்கிக் கொள்ள 1874-இல் இசைந்தனர்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், சர்க்கரை, வாழை, பாக்கு ஆகியவை பெரிய அளவில் பயிரிடப் பெற்றன. வெளிநாட்டுத் தொழிலாளர் வரவழைக்கப் பெற்றனர். 1945 முதல் பீஜியின் ஆட்சியில் பீஜியர்களுக்குச் சில அதிகாரங்கள் வழங்கப் பெற்றுள்ளன; கவர்னரின் நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர் சிலரும் உள்ளனர். தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினரே மிகுதியாக உள்ள சட்டசபையும் இயங்கி வருகிறது.

### அரசியல் நிலை

பீஜி கத்தியின்றி இரத்தமின்றிப் பிரிட்டிஷாரிடம் 1874 அக்டோபர் 10-ல் வலிய வந்து சேர்ந்தது. இப்போது பிரிட்டிஷ் முடியின்கீழ் ஒரு காலனியாக இருந்து வருகிறது. அங்கிருந்துதான் பிரிட்டிஷார் பசிபிக் பெருங்கடலில் தங்களுக்குள்ள பல தீவுகளை ஆளுகின்றனர். 1860-க்குப் பின் ஆஸ்திரேலியாவிலிருந்தும்

நியூசிலந்திலிருந்தும் குடியேறி ஐரோப்பியரும் அவரைச் சார்ந்தவர்களும் 16,000 பேர் பீஜியில் வாழ்ந்து வருகிறார்கள். பசிபிக் தீவுகளில் சுதந்தரக் கிளர்ச்சி பொதுமக்களின் இயக்கமாக உருவாகவில்லை.

## 3. நாடும் மக்களும்

### பெயர்க் காரணம்

பீஜி என்பது 322 பவழத் தீவுகளின் தொகுப்பு ஆகும். இந்தத் தீவுக் கூட்டத்துக்கும் "பீஜி" (Feejee) என்பதுதான் தொன்மையான பெயர். பிரிட்டிஷ் ஆட்சியில், திருச்சிராப்பள்ளி 'ட்ரிச்சினாபலி' என்றும் மருவி வழங்கத் தொடங்கியதுபோலவே, பீஜி 'பிஜி' ஆயிற்று. பீஜியின் முழுப்பெயர் பீஜி மொகாம்போ என்பது. இச்சொற்றொடருக்குச் சந்திக்கும் இடம் என்பது பொருள். ஆஸ்திரேலியா, நியூசிலந்து, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளை இணைக்கும் இடமாகப் பீஜி இருக்கிறது. பனாமாக் கால்வாய் வெட்டப்பட்டதிலிருந்து பசிபிக் பகுதியின் தற்காப்புத் திட்டத்தில் பீஜி கேந்திர மானதோர் இடமாகிவிட்டது. பல நாடுகளின் பெரிய கப்பல்களும் பசிபிக் தீவுகளிடையே செல்லும் 'லாஞ்சு' களும் அங்கு வந்து போகின்றன. ஆகாய விமானங்கள் வெளிநாடுகளுக்கு மட்டுமன்றி உள்நாட்டுக்குள் பல நகரங்களுக்கும் செல்லுகின்றன. பீஜியின் முக்கிய விமான நிலையமான நந்தியை—ஜெட் விமானங்களும் வருவதற்கு வசதியாக பிரிட்டன் ஆஸ்திரேலியா நியூசிலந்து—மூன்று நாடுகளும் செலவிட்டுத் திருத்தியமைத்துள்ளன.


### தீவுகள்

பீஜித் தீவுகள் பலவற்றில் பெரிய காடுகள் இருப்பதால், 106 தீவுகளில்தான் மக்கள் வாழ்கின்றனர்.

இவற்றுள் பெரியவை விதி லெவு (வீதிலெவூ என்று உச்சரிப்பர்) என்பதும் வனுவா லெவு என்பதும்.

விதி லெவு தீவின் பரப்பு 4,000 சதுரமைல்; அதாவது திருச்சி மாவட்டத்தைவிடச் சற்று சிறியது. பீஜியைச் சேர்ந்த எல்லாத் தீவுகளின் மொத்தப் பரப்பு 7083 சதுரமைல்; அதாவது தமிழ்நாட்டின் மிகப் பெரிய மாவட்டமாகியசேலம் மாவட்டத்தின் பரப்புக்குச் சமம்.

தலைநகர்



கடலைத் தூர்த்து இந்த இடங்களில்தான் சூவா நகரின் பெரும்பகுதி கட்டப்பட்டிருக்கிறது. 40,000 மக்கள் வாழ்கின்றனர். துறைமுகத்திலிருந்து பார்த்தால் சூவா நகரம் தரும் காட்சியைப் படத்தில் காண்க. எதிரே தெரிவன கிராண்டு பசிபிக் ஓட்டலும், அரசாங்க அலுவலகக் கட்டிடங்களும்.

பீஜியின் தலைநகர் சூவா என்னும் சிறுநகரம்; இது நம் தமிழ்நாட்டிலுள்ள சாதாரண நகரசபை அளவுகூட

இல்லை. ஆனால், கடலோரத்திலும், ரீவா ஆற்றின் கரையிலும் அமைந்து வணிக நகரமாக இருக்கிறது.

பெரிய கப்பல் ஏதாவது வந்துவிட்டால் அன்று சூவா நகர் மிகவும் சுறுசுறுப்பாகக் காட்சி தரும். சூவா துறைமுகம் இயற்கையாக அமைந்தது. பசிபிக் பெருங்கடலின் வழியாகச் செல்லும் கப்பல்களுக்கு இது முக்கியமான துறைமுகம்.

வளம்

நம் நாட்டில், வளத்தை மழையைக்கொண்டு முடிவு செய்கிறோம். இந்த அடிப்படையில் பார்த்தால், பீஜி மிக வளமான பகுதி. புதுக்கோட்டையில் எட்டு ஆண்டுகளில் பெய்யும் மழை பீஜியில் ஓராண்டில் பெய்கிறது. அங்கு மழையின் அளவை அங்குலத்தில் சொல்லுவதில்லை; அடிக்கணக்கில்தான் அறிவிப்பார்கள்; சராசரி மழை 12 அடி, பீஜியில் மழை பெய்வதில்லை; பொத்துக் கொண்டுதான் வரும்.

பலவகைப்பட்ட மக்கள் வாழும் சிறப்பு இத்தீவுக்கு உண்டு. மொத்தம் ஏறத்தாழ நான்கு லட்சம் பேரில்,

| | |
|---|---|
| இந்தியர் | 2,00,000 |
| பீஜியர் | 1,57,000 |
| பசிபிக்கின் பிற தீவுகளிலிருந்து குடியேறியவர் | 9,000 |
| ஐரோப்பியர் | 8,000 |
| ஐரோப்பியர்க்கும் மற்ற இனத்தவர்க்கும் பிறந்த கலப்பு இனம் | 8,000 |
| சீனர் | 4,000 |

மத அடிப்படையில் 51% கிறித்தவர், 40% ஹிந்துக்கள், 7% முஸ்லீம்கள்.

## 4. இந்தியர்

பீஜியிலிருந்து 15,500 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது இந்தியா. இவ்வளவு தொலைவிலிருந்து ஏராளமான இந்தியர் வந்து குடியேறியிருப்பது பீஜியில் ஒரு 'இக்கட்டான' நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. பல துறைகளில் இவர்கள் சிறந்து பெருநகரங்களில் கண்ணுக்குக் தெரிபவரெல்லாம் இந்தியராக இருக்கின்றனர். இதனால் இத்தீவுக்கு 'பசிபிக் பெருங் கடலிலுள்ள சிறிய இந்தியா' என்ற அடைமொழியை வெள்ளையர்கள் கொடுத்திருக்கின்றனர். இச் சிறிய இந்தியாவில் வாழும் இந்தியர் நிலையை ஆராய்வோம்.

பீஜியைப் பிடித்துக்கொண்ட வெள்ளைக்காரர்கள், அங்கு பெரிய அளவில் கரும்பு பயிரிடவும் சர்க்கரை ஆலை அமைக்கவும் ஆசைப்பட்டனர். பசிபிக்கின் தீவு வாழ்நர் இந்தத் தொழிலுக்கு ஏற்றவராக இல்லை என்பதை 1870 முதல் 1879 வரை அவர்களை வேலைக்கு வைத்துப் பார்த்து உணர்ந்தனர். நேட்டால், மொரிசியஸ் ஆகிய நாடுகளில் செய்ததுபோல, இந்தியத் தொழிலாளரை வரவழைப்பதே காடு வெட்டி நாடாக்கிக் கடிய நிலம் திருத்த வழி என்று அவர்கள் 1879-இல் உணர்ந்தனர். மாதந்தோறும் இந்தியர் இவ்வளவு பேரை அனுப்பவேண்டுமென்று, பீஜியிலுள்ள வெள்ளையர் சென்னையிலுள்ள பாரி கம்பெனி என்ற வெள்ளையரின் வணிகக் குழுவைக் கேட்டுக்கொண்டனர்.

இதன் விளைவாகத்தான் பாரி பம்பெனியாருக்குத் தமிழ் நாட்டிலேயே சர்க்கரை ஆலை அமைக்கும் எண்ணம் உருவாயிற்று என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

முதலில் ஆடவர் மட்டுமே பீஜிக்குச் சென்றனர் ஒரு சிலர்தான் பெண்களை அழைத்துச் சென்றனர்.

ஆடவர் பெண்டிர் தொகை ஒன்றுக்கொன்று பொருந்தாததாக இருந்ததால், பல சிக்கல்கள் ஏற்பட்டன. பிறகு 'குடும்பமாக அனுப்புங்கள்' என்று ஆட்சியாளர் ஆணையிட்டனர். அதற்கேற்ப, தமிழரும் ஏனைய இந்தியரும் வளமிக்க நாட்டைப்பற்றி வர்ணிக்கக் கேள்விப்பட்டு, வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் வாழ வழி தேடி, வரிந்து கட்டி ஓடினர்.

இந்தியர் வருகையால் பலன் அடைந்தது கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனி என்ற வெள்ளைக்காரர்களின் சர்க்கரை ஆலை. ஆலைக்குச் சொந்தமான பகுதியில் கரும்பு பயிரிடுபவர்க்கு நெடுங்கால குத்தகைக்கு நிலம் வழங்கி மேலும் சில ஆயிரம் இந்தியரை வரவழைத்தனர். இவ்வாறு சென்றவர் பலர் 1915-க்குப் பின் பல தொல்லைகளுக்கு ஆளாயினர்; இவர்களுடைய நிலையை ஆராய மகாத்மா காந்தியின் சீடரும் இந்தியாவுக்கு அரும்பணி ஆற்றிய பெரியாருமாகிய தீனபந்து சி. எப். ஆண்ட்ரூஸ் 1916-இல் பீஜிக்குச் சென்றார். அதன் பிறகே பீஜி இந்தியர் நிலைபற்றி நம் நாட்டில் அக்கறை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையில்தான்,

" கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே "

என்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் உள்ளமுருகப் பாடினார்.

சர்க்கரைத் தொழிலாளராக இல்லாத மற்ற இந்தியர் வாடகைக் கார் இயக்குகின்றனர்; அல்லது தாமே சிறு வியாபாரங்கள் செய்கின்றனர்; பஸ்களை நடத்துகின்றனர்; சிலர் வைத்தியர்களாக இருக்கின்றனர்; தையல் வேலை, துணி துவைத்தல், அணிகலங்கள் செய்தல், தோல்

தொழில்ஆகியவற்றில் பல தொழில்களை பீஜியில் இந்தியர் மட்டுமே செய்து வருகின்றனர். அரசியலாரிடம் ஊழியம் செய்து வருவாய் பெருவோரும் உள்ளனர். தச்சுவேலை, தகரவேலை முதலியவற்றுக்கு இன்னும் இந்தியர் தேவைப்படுகின்றனராம்.

மத அடிப்படையில் பீஜி இந்தியரின் நிலை வருமாறு:

| | |
|---|---|
| ஹிந்துக்கள் | 1,60,000 |
| முஸ்லிம்கள் | 18,600 |
| சீக்கியர் | 2,300 |
| கிறித்தவர் | 773 |

மொழி அடிப்படையில் பார்த்தால் தமிழர் நாற்ப தாயிரம் பேர் உள்ளனர். இவர்களில் பலர்க்குத் தமிழ் பேசத் தெரியும்; எழுதத் தெரியாது. மற்றவர்கள் வங்கா ளத்திலிருந்தும் உத்தரப் பிரதேசத்திலிருந்தும் குடி யேறியவர்கள்.

அரசியல் அடிப்படையில் இந்தியர் பல சங்கங்களை வைத்திருக்கிறுர்கள். இவை தவிர ஜனநாகி கேந்திரிய சபை, உழவர் சங்கம், பீஜி கிருஷோக் மகா சங்கம் ஆகிய வையும் உள்ளன.

1879-இல் பீஜியில் மற்றவர்கள் 999 பேருக்கு இந்தியர் ஒருவர் என்ற ஈவு இருந்துவந்தது. 1960-இல் பீஜியில் ஏனைய எல்லா இனத்தவருக்கும் இந்தியர்க்கும் ஈவுத் தொகை சமம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனுல் பிற இனத்தவர் கலக்கம் அடைந்துள்ளனர். எனவே, சட்டசபையில் 33 பேரில் ஐந்து இந்தியர்க்கு மட்டுமே இடம் தரப்பட்டிருக்கிறது. 'நீங்கள் பிழைக்கத் தானே வந்தீர்கள், ஆள வரவில்லையே?' என்ற கருத் தைப் பீஜியர் தெரிவிக்கும் நிலையைப் பிரிட்டிஷார் உண் டாக்கிவிட்டனர். பீஜியிலுள்ள இந்தியர் ஒவ்வொருவரும்

ஆண்டுதோறும் 22 ரூபாய் தலைவரி செலுத்தும் முறையும் இருந்து வருகிறது.

1947-இல் நாம் சுதந்தரம் அடைந்த பிறகு கடல் கடந்த இந்தியர் நிலையிலும் பிரிட்டிஷ் காமன்வெல்த் உறவு முறையிலும் 'கெடுபிடி'யாக நடந்துகொள்ளாமல், நமது அரசாங்கம் சற்று ஆறுதலாகவே இருந்து வந்திருக்கிறது; நிதானமான கொள்கைகளையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. இதன் பயனாக, இந்தியரின் செல்வாக்கை குறைத்து விடுவதற்காகப் பீஜியை நியூசீலந்துடன் இணைக்கும் திட்டத்தைப் பிரிட்டிஷார் கைவிட்டு விட்டனர்.

இந்தியரைப்பற்றிப் பீஜி அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள சில புள்ளி விவரங்களை நாம் ஊன்றி ஆராயலாம்.

பீஜிவாழ் இந்தியரில் 100-க்கு 85 பேர் பீஜியில் பிறந்தவர்களே. 1,000 பீஜியப் பெண்களையும் 1,000 இந்தியப் பெண்களையும் கணக்கிட்டுப் பார்த்தால், பீஜியப் பெண்களுக்கு 180 குழந்தைகள் உள்ளனவாம்; இந்தியப் பெண்களுக்கு 231 குழந்தைகள் உள்ளனவாம். இதற்குக் காரணம், பிஜியரைவிடச் சிறு வயதிலேயே இந்தியர் திருமணம் செய்து கொள்வதாகும்.

மற்றொன்று. பீஜியருடைய குழந்தைகளில் ஆண் குழந்தைகளின் எண்ணிக்கையும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையும் சமமாக உள்ளன. ஆனால், இந்தியருடைய குழந்தைகளைப் பால்வாரியாகப் பகுத்தால், 55 பெண்களும் 45 ஆண்களும் இருக்கின்றனர். வருங்காலத்தில் இந்தியர் தொகை இன்னும் பெருகும் என்பதற்கு இது அறிகுறி. இவ்வளவு ஆண்டுகள் ஆகியும்கூட, பீஜியர்-இந்தியர் கலப்பு மணம் ஒன்றுகூட இதுவரை நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசாங்கம் தங்கள் பிரதிநிதியாகப் பீஜியில் ஒரு கமிசனரை நியமித்திருக்கிறது. இக் கமிசனர், லண்டனிலுள்ள இந்திய ஹைகமிசனருக்குக் கட்டுப்பட்டவர்; அவர் மூலமாகவே, பல செயல்களைச் செய்யவேண்டும். இதற்குக் காரணம், பீஜி பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக இருந்து வருவதால் அதன் அடிப்படைக் கொள்கைகள் லண்டனிலேயே வகுக்கப்படுவதாகும்.

பீஜியிலுள்ள இந்தியக் கமிசனர் அலுவலகத்தில் நூல் நிலையம் இருக்கிறது; இந்திய அரசாங்கத் திரைப் படங்களை வரவழைத்து இங்கே காட்டுகின்றனர்.

பீஜியில் இராமகிருஷ்ண மடம் நிலையான பணிபுரிந்து வருகிறது. 1931 முதல் இதனால் பீஜி வாழ் மக்கள் அனைவரும் பயனடைந்துள்ளனர். 1952 முதல்தான், 'மடம்' என்ற பெயரில் நிறுவனமாக இது இயங்கி வருகிறது. இயற்கைச் சூழலில், நந்தி நகரில், மடத்தின் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. பிரார்த்தனையும் பஜனையும் நாள் தோறும் நிகழ்கின்றன. திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. பீஜியின் பல நகரங்களில் ஹிந்து மதம் பற்றிய வகுப்புக்களை இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் நடத்தி வருகின்றனர்.

10,000 நூல்கள் உள்ள நூல்நிலையம், மாணவர் இல்லம், மாணவியர் விடுதி ஆகியனவும் நடத்தி வருகின்றனர். இவற்றில் தமிழ் முதலிய இந்திய மொழிப் படங்களை அவ்வப்போது காட்டுகின்றனர். இவர்கள் நடத்திவரும் விவேகானந்த உயர்நிலைப் பள்ளிக்கு 1958-இல் புதிய கட்டிடம் மூன்று லட்சம் ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. லவ்டோகா நகரில் பெரியதொரு நூல் நிலையத்துக்குக் கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கின்றனர். டைலேவு என்னுமிடத்தில் 400 ஏக்கர் தோட்டத்தில் ஓர் ஆசிரமம் தொடங்கியுள்ளனர்.

தென்னிந்தியச் சன்மார்க்க இலக்கிய சங்கம் திருக்குறள் முதலிய தமிழ் நூல்களை பீஜி மொழியில் வெளியிட்டிருக்கிறது.

### இந்தியச் சொற்கள்

ஒருவரை ஒருவர் காணும்போது, பீஜியர் 'பூலா' (வணக்கம்) என்பர்; 'பூலா வினக' (உனக்கும் வணக்கம்) என்று நாம் பதில் சொல்லவேண்டும்.

பீஜியின் பெரிய விமான நிலையம் 'நந்தி' என்பது; நந்தியின் பெயரால் 'நந்தி நகர்', 'நந்திகுடா', 'நந்தி ஆறு' என்பன போன்ற பல பெயர்கள் இன்னும் நிலவி வருகின்றன.

பீஜியின் தலைநகரம் சூவா; 'சிவா' தான் சூவாவாக மருவியிருக்க வேண்டும். ஏனெனில், சிவா என்னும் சொல்லுக்குப் பீஜியர் 'மேடை' என்று பொருள் கூறுகின்றனர்.

## 5. பீஜியர்

### தோற்றம்

பீஜியரில் 6 அடி உயரம் உள்ளவர்களைச் சாதாரணமாகக் காணலாம். பார்க்க, பயில்வானைப்போல இருப்பர்.

பீஜியர் குச்சிபோல் நிற்கும் தலைமயிரை உடையவர்கள். எலுமிச்சம்பழச் சாறு போன்று ஒன்றால் சாயம் செய்து அதைத் தலைமயிருக்குத் தடவிப் பயன்படுத்துவதே இதற்குக் காரணம். சாம்பல், கறுப்பு, மாநிறம் ஆகிய பல நிறத்தவர் பீஜியருள் உண்டு. உயரமான தோற்றமும், அடர்த்தியான தலைமயிரும், கவனக் குறை

வாக உடுத்திய உடைகளும். காலில் செருப்பு அணியா திருப்பதும், நாற்கோண வடிவமுள்ள தகரங்களில் மீன் பிடிப்பதும் பீஜியரின் பொதுவுடைமை.

### பெயர்கள்

பீஜியர் ஏதாவது ஒரு நிகழ்ச்சியைக் குறித்துப் பெயர் வைத்துக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக: ஒருவன் தன் பாட்டன் இறந்த நாளில் பிறந்தால், 'பாட்டன் இறந்தபோது பிறந்தவன்' என்று அவனுக்குப் பெயரிடுவர். பீஜியருடைய பெயர்கள் மிக நீளமாக இருக்கின்றன.

### மதம்

பீஜியர் பேய் பிசாசுகளை வணங்குகின்றனர். இப்போது பெரும்பாலோர் கிறித்தவ சமயத்தில் சேர்ந்து விட்டனர். எனினும், பல தலைமுறையாகப் பழகிய பழக்கங்கள் அவர்களுடன் இரண்டறக் கலந்துவிட்டன.

### நம்பிக்கைகள்

பீஜியர் அடிக்கடி மயானத்துக்குச் சென்று, இறந்து போன கணவர் அல்லது தந்தைக்கு உணவு படைக்கின்றனர்.

### தொழில்

தென்னந்தோப்பு, வாழைத்தோட்டம் தவிர பிற தொழில்களில் பீஜியர் ஈடுபடுவதில்லை. யாரிடமும் கை கட்டி வேலை பார்ப்பது அவர்கள் அறியாத ஒன்று. கடந்த சில ஆண்டுகளாகப் பீஜிப் பெண்கள் சிலர், சிகரட் தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வருகின்றனர்.

உணவு

மனிதனை உயிரோடு உண்டனர். 1867-இல் ஒரு பாதிரியைக் கொன்று தின்றனர்; அவர் அணிந்திருந்த பூட்சை (அதற்குமுன் அவர்கள் பூட்சைப் பார்த்ததில்லை) வேகவைத்து அதையும் உடலின் பகுதியென எண்ணி உண்டனர். இந்நிகழ்ச்சிக்குப்பின் மனித உடலை உண்பது தடைசெய்யப்பட்டது. பல்லி, தவளை, சிலவகை எறும்புகள் ஆகியவற்றை உண்கின்றனர். அடிக்கடி தேநீர் பருகுவர். மிளகுச் செடியின் வேரிலிருந்து எடுத்த ஒரு பொருளால் செய்யப்பட்ட 'காவா' நீரைக் குடிப்பர்; இது குடிபோதையைக் கொடுக்கும். பழங்கள், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பூசனி ஆகியவையும் ரொட்டி (பிஸ்கட்)யும் மீனும் அவர்களுடைய உணவு நிரலில் உரிய இடம் பெறுகின்றன. மொத்தத்தில் அவர்கள் 'சாப்பாட்டு ராமர்கள்.'



உடை

பெரும்பாலான ஆடவர் 'சுறு' என்ற குட்டையான உடை உடுத்துவர். பெண்கள் 'மதர் ஹப்பார்டு' என்ற

நீண்ட உடை உடுத்துவர். சங்கு, எலும்பு பன்றியின் பல்-இவற்றைக்கொண்டு செய்த நகைகளைப் பயன் படுத்துவர்.

### வீடு

தென்னை வாழைத் தோட்டங்களினூடே பீஜியர் முன்பக்கம் படத்தில் இருப்பதைப்போன்று வீடுகளைக் கட்டிக்கொள்கின்றனர். தென்னங்கீற்றும் மூங்கிலும் தான் வீடுகட்ட இவர்கள் பயன்படுத்தும் முக்கியமான பொருள்கள்.

### பழக்கங்கள்

பிற்பகலில் படுத்து உறங்குவர். கொதிக்கும் கற்களின்மீது நடப்பர். மரத்தைக் குடைந்து தோணி செய்வர். பொதுவாக பீஜியர் சோம்பேறிகள். ஒரே வேலை பார்த்தாலும், வெள்ளைக்காரர் இந்தியருக்குக் கொடுப்பதில் நான்கில் ஒரு பங்கு சம்பளம்தான் பீஜியருக்குக் கொடுப்பார்கள். இன்னொருவர் தலையைத் தொடுவது அவரை அவமானப்படுத்துவது என்று பீஜியர் கருதுவர். நாம் இவ்வாறு செய்தால் வாழ்த்துவ தாக நினைக்கிறோம். நாம் சீப்பால் சீவி, தலைமயிரைப் படிய வைப்போம்; அவர்கள் தலைமயிர் குச்சிபோல் நிற்கும்படி செய்ய, சீப்பு உபயோகிக்கின்றனர்.

இரட்டைக் குழந்தை பிறந்தால் ஒரு குழந்தையைக் காட்டில் கொண்டுபோய்ப் போட்டு விடுவார்கள்.


### பீஜியருக்கு விருப்பமான எண்—4

### பீஜியரின் கொள்கை

'கடவுளுக்கு அஞ்சு: அரசனிடம் மரியாதையாக நடந்துகொள்.'

மரியாதை

யாரையாவது பாராட்ட விரும்பினுல் அவருக்குத் திமிங்கிலத்தின் பல்லே அன்பளிப்பது பீஜியப் பண்பாடு; இது நம் நாட்டில் பொன்ஞடை போர்த்துவதுபோல ஒரு பெருமையாகக் கருதப்படுகிறது. மரியாதைக்கு அடையாளமாக மௌனமாக இருப்பதும் பீஜியர் பழக்கம்.



பீஜியர்களில் முக்கியமான சமூகத் தலேவர் யாராவது இறந்த பிறகு ஒரு சடங்கு நடத்தித் துக்கத்தை மறந்து பழமைபோல நடந்து கொள்வார்கள். அந்தச் சடங்குக்கு 'வகா-தாரா இ-சுலு' என்று பெயர். அப்பொழுது 'பட்டை' களேயும் திமிங்கிலத்தின் பல்லேயும் தென்னே நாரால் சுற்றுவதைப் படத்தில் பார்க்கலாம்.

யாராவது உயிர் நீத்தால், அவருடைய உறவினர் தலேயை மொட்டை அடித்துக்கொள்ளுவதோடு, சுண்டு

விரலை வெட்டிக்கொள்வதும், ஓரிருநாள் உண்ணுவிரதம் இருப்பதும் அவருக்குச் செய்யும் மரியாதை என்று பீஜியர் கருதுகின்றனர்.

சமுகத்தலைவர் யாராவது இறக்கும்போது அவருக்கு மரியாதை செலுத்துவர். இந்தச் சடங்கு பல ஆண்டு களுக்கு ஒரு முறைதான் நிகழக்கூடும். எனவே, முன் அறிவிப்புக்குப் பின் பெருங் கூட்டம் கூட்டி, சடங்கு களைச் செய்வார்கள்.

அரசியல்

பீஜி (யிலுள்ள பிரிட்டிஷ்) அரசாங்கம் பீஜியர் களின் நல்லெண்ணத்தைப் பெற, அவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கி வருகிறது. இவற்றுள் ஒன்று: (21 வயதுக்குட்பட்ட) 5 குழந்தைகளும் அதற்கு மேலும் உள்ள பீஜிய ஆடவர் சில வரிகளைக் கட்ட வேண்டுவ தில்லை. போர்க்காலத்தில் பீஜியர் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்தனர்; இந்தியர் ஒதுங்கியிருந்தனர் என்பது இங்கே நினைவிற் கொள்ளத்தக்கது.

## 6. தொழில்

பீஜியின் முக்கியமான தொழில் சர்க்கரை ஆலை தான். அதைப்பற்றிக் கூறுமுன், பிற தொழில்களைக் கவனிப்போம்.

ஆண்டுக்கு 70,000 அவுன்சு (இந்தியாவில் 2,12,000) தங்கம் தோண்டப்படுகிறது; இப்போது உரேனியம் காணும் முயற்சிகள் மும்முரமாக நடை பெற்று வருகின்றன. நிக்கல், துத்தநாகம் போன்ற பல கனிவளங்களும் அகப்பட்டிருக்கின்றன.

பீஜியின் ஏற்றுமதிகள்: தேங்காய் எண்ணெய், மங்கனீசுத் தாது, பழுப்புச் சர்க்கரை, அன்னாசிப்பழம்.

பீஜியின் ஆட்சி வெள்ளைக்காரனிடம் இருப்பதால், வியாபாரம் அனைத்தும் இங்கிலாந்துடன்தான் நடை பெறுகிறது. வங்கிகளை ஆஸ்திரேலியரும், மீன்பிடி தொழிலில் பெரிய நிறுவனங்களை அமெரிக்கரும் வாழைத் தோட்டங்களைப் பீஜியரும் நடத்துகின்றனர்.

விவசாயத் துறையில், இந்தியர் சிறந்து விளங்கு கின்றனர். இந்தியர் பாடுபட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் மனப்பான்மையுடையவர்.

இந்தியர் இப்போது 50,000 ஏக்கரில் கரும்பும், 10,000 ஏக்கரில் நெல்லும், 2,000 ஏக்கரில் பருத்தியும் பயிரிடுகின்றனர்.

பீஜியரிடம் ஒன்பது பங்கும் இந்தியரிடம் ஒரு பங்கும்தான் நிலம் இருக்கிறது. எனினும் இவர்கள் கரும்பு, கொக்கோ, மிளகு பயிரிட்டு நன்கு நிலத்தை வளப்படுத்துகின்றனர். ஆகையால் பீஜியர் தங்கள் நிலத்தை இந்தியர்க்குக் குத்தகைக்குவிட வேண்டுமென்று அரசாங்கம் ஆண்டுதோறும் வற்புறுத்தி வருகிறது!

இடையிடையே, கரும்பைக் குறைந்த விலைக்கு வாங்க, பீஜியில் முயற்சி நடைபெறுகிறது. கரும்பு பயிரிடுவோர் அனைவரும் இந்தியர். சர்க்கரை செய்பவர் வெள்ளையர். கரும்பு விலை குறைந்தால், நட்டம் இந்தியருக்கு; வருவாய் வெள்ளையருக்கு; எனவே பீஜியில் கரும்பு விலை குறையாமல் தடுப்பது, இந்திய அரசாங்கத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்றாக இருந்து வருகிறது!

### சர்க்கரைத் தொழில்

சர்க்கரை ஆலைகள் நந்தி விமான நிலையத்திலிருந்து 16 மைல் தொலைவிலுள்ள ஓரிடத்தில் இருக்கின்றன. இவை கலோனியல் சுகர் ரிபைனிங் கம்பெனி லிமிடெட்

என்ற ஆஸ்திரேலிய நிறுவனத்தைச் சேர்ந்தவை. பீஜித் தீவுகளில் இதுதான் மிகப் பெரிய வாணிபக் குழு. பீஜியி லுள்ள ரயில் பாதை இந்தக் குழுவைச் சேர்ந்ததேயாகும். கரும்பை ஆலைக்குக் கொண்டு போகவும் சர்க்கரையை ஆலையிலிருந்து துறைமுகத்துக்குக் கொண்டுபோகவும் இந்த இரயில் பாதை அமைக்கப்பட்டது.

டவுவாவிலிருந்து லவ்டுகாவுக்கு 135 மைல் தொலை வுக்குச் சர்க்கரை ஆலை 1905-இல் இரயில் பாதை போட்டுக்கொண்டது. வாரத்தில் ஒரு நாள் அந்தப் பாதையில் பிரயாணிகளை இலவசமாக ஏற்றிச் செல்ல வேண்டுமென்ற அரசாங்க நிபந்தனையை அப்போது அந்த ஆலையினர் ஏற்றுக்கொண்டனர். இன்றளவும் பீஜியில் இது ஒரு பெரிய வசதியாக இருக்கிறது!

பிலிப்பைன்சிலும் கியூபாவிலும் சர்க்கரை ஆலைகளை அமெரிக்கர் நடத்துகின்றனர். மொரீசியசிலும், ஜாவா விலும் தமிழ்நாட்டிலும் அவை முறையே பிரெஞ்சுக் காரரையும் டச்சுக்காரரையும் பிரிட்டிஷாரையும் சேர்ந் தவை. எனவே, சர்க்கரைக்கு எப்போதுமே வெளி நாட்டார்மீது விருப்பம் மிகுதி போலும். பீஜியின் சர்க்கரைத் தொழிலை ஆஸ்திரேலியர் நான்கு கோடி ரூபாய் மூலதனம் போட்டு 1918-இல் தொடங்கினர். உற்பத்தியில் பெரும்பகுதியைப் பிரிட்டிஷார் எப்போதும் வாங்கிக்கொள்ளுவதாக உடன்பாடு செய்திருப்பதால், பீஜிச் சர்க்கரையின் விலையில் மிகுதியான ஏற்றத் தாழ்வு கள் அண்மையில் ஏற்படுவதில்லை.

பீஜியின் பொருள்களெல்லாம் வெளிநாடுகளுக்கு ஆஸ்திரேலியக் கப்பல்களிலேயே செல்லுகின்றன. ஏனைய தொழில்களிலும் ஆஸ்திரேலியர் அங்கே ஈடுபட்டுள்ளனர். இதற்குத் துணையாக ஆஸ்திரேலிய வங்கிகள் பீஜியில்

வேலை செய்கின்றன. பேங்கு ஆவ் நியூ சௌத் வேல்ஸ் என்ற பெரியதோர் ஆஸ்திரேலிய வங்கியின் கிளை நந்தி விமான நிலையத்திலும் இருக்கிறது.

**பிற தொழில்கள்**

புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு வேண்டிய மூலதனம் பீஜியரிடமோ இந்தியரிடமோ கிடையாது.

## 7. மொழி

பீஜியின் ஆட்சி மொழிகள் இரண்டு. ஒன்று ஆளுவோர் மொழியான ஆங்கிலம்; மற்றொன்று, தொன்றுதொட்டு இந்நாட்டு மக்கள் பேசிவரும் 'பௌஅன்' என்னும் பீஜியக் கிளைமொழி. இந்தியர் ஹிந்தி மொழி பேசுகின்றனர்.

இம்மூன்று மொழிகளிலும் பீஜி வானொலி அதன் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.

ஆங்கில மொழியில் ஒரு நாள் இதழும், மூன்று மொழிகளிலும் வார இதழ்களும் 'சங்கம்' என்ற தமிழ் இதழும் வெளிவருகின்றன.

பீஜிய மொழியில் பேச்சும் எழுத்தும் வேறுபடும். நந்தி என்று சொல்லுவதை நதி என்று எழுதுவர்; லம்பாசா என்று சொல்லுவதை லபாசா என்று எழுதுவர்.

## 8. கல்வி

பீஜியில் 33 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் அரசாங்கத்தாரால் 10 பள்ளிகளும், இந்தியரால் எட்டும், கிறித்தவப் பாதிரிகளால் 13-ம், சீனரால் இரண்டு பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இப் பள்ளி

களில் படிப்பவர் கேம்பிரிட்ஜ் தேர்வு அல்லது நியூ சீலந்துத் தேர்வு எழுதவேண்டும்.

சிறந்த மருத்துவக் கல்லூரி பீஜியில் இருக்கிறது. இது 1957-இல், நப்பீல்டு பிரபு என்னும் வெள்ளைக்கார வள்ளலின் 81-வது பிறந்த நாளை முன்னிட்டு, அவருடைய அறநிலையக் குழுவினரின் பொருளுதவியால் இன்னும் பெரிய அளவில் வளர்ச்சியடைந்திருக்கிறது. இங்கே பயின்றவர்கள் பசிபிக்கிலுள்ள பல தீவுகளில் மருத்துவ ராகப் பணியாற்றி வருகின்றனர். பீஜியில் பல்கலைக் கழகம் கிடையாது. மேல்படிப்புப் படிக்க, மாணவர்கள் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் செல்லுகின்றனர். வெளிநாடுகளில் போய்ப் படிக்க, பீஜி அரசாங்கம் சிலருக்கு உதவுகிறது. இந்திய அரசாங்கம் ஆண்டுதோறும் 15 பேருக்கு உதவித் தொகை வழங்குகிறது. இவ்வாறு கல்வி பயில வந்திருக்கும் சிலரைச் சென்னையிலும் காணலாம்; வெளிநாடுகளுக்குப் போகும்போது தன்னந்தனியாய்ச் சென்று, வரும்போது சிலர் குடும்பத்தினராய்த் தாயகம் திரும்புகின்றனர்.

இந்தியர் நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் ஹிந்தி, உருது, தமிழ், தெலுங்கு, குஜராத்தி மொழிகளில் ஐந்தாம் வகுப்புவரையும், அதற்குமேல் ஆங்கில மொழியின் மூலமாகவும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

## 9. அரசியல் நிலை

மக்கள் தொகை பெருகி வருவதாலும், பல நாடுகளின் அரசியல் கொந்தளிப்புகளின் விளைவாகவும் 1957 முதல் பீஜியிலும் சிறு அளவில் கலகங்களும் அரசியல் கிளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. அரசாங்கத்தார் 'பீஜித் தீவுகளுக்குச் சுதந்தரம் கொடுக்கும்போது,

## பசிபிக்கின் அரசியல் நிலை

| ஆளும் நாடு | பொலினீசியா | மெலனீசியா | மைக்ரோனேசியா |
|---|---|---|---|
| பிரிட்டன் | எலிஸ் தீவு<br>டொங்கா தீவு<br>பொனீக்ஸ் தீவு | சாலமன் தீவு<br>சாந்தாகுருசு<br>பீஜித் தீவுகள் | கில்பர்ட் தீவு<br>'ஓசன்' தீவு |
| ஆஸ்திரேலியா | | பிஸ்மார்தீவு<br>பொகைன்வில்லி<br>நியூ கினியாவின் ஒரு பகுதி | |
| நியூசிலந்து | 'குக்' தீவுகள்<br>சமோவாவில் சில தீவுகள் | | |
| அமெரிக்கா | தத்துய்லா<br>மனுவா<br>ஹவாய் (இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உறுப்பு இராச்சியமாகியது) | | பலாவ்<br>கரோலினிஸ்<br>போனின்<br>மார்ஷல்ஸ் |
| பிரான்சு | தகித்தி<br>தைமோடோ<br>மார்குசாஸ் | நியூ கலிடோனியா | |
| பிரிட்டனும் பிரான்சும் கூட்டாட்சி | | நியூ ஹெபிரிடீஸ் | |
| ஹாலந்து (டச்சு) | | நியூ கினியாவின் ஒரு பகுதி | |
| ஈக்குவடார் | கலபகோஸ் | | |
| சில்லி | ஈஸ்டர் தீவு | | |

பீஜியரின் நலத்தைக் காக்கவேண்டும்; இந்தியர்கள் போன்ற அயலவர் ஆட்சியில் நாங்கள் வாழ இயலாது. நாங்கள் ஆங்கிலேயர்களைத்தான் வருந்தி அழைத்தோம். இந்தியர்களை அல்ல' என்று பீஜியர் சிலர் கிளர்ச்சி செய்கின்றனர். பீஜியர், இந்தியர் இருவருமே ஆங்கிலேயரை நம்பி வாழ்கின்றனர்.

ஆங்கிலேய கவர்னர் ஜெனரலின் தலைமையில் அமைச்சரவை இயங்குகிறது. அதில் ஆங்கிலேயர், பீஜியர், இந்தியர் அமைச்சர்களாக உள்ளனர். பீஜிய, இந்திய அமைச்சர்களின் எண்ணிக்கை சமமாக இருக்கிறது.

பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் பெரிய அளவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றுக்காக பிரிட்டன் இரண்டு கோடி ரூபாய் உதவியிருக்கிறது.

## 10. பல்சுவை

### இருப்பவை

தங்கச் சுரங்கங்கள், தென்னந்தோப்புகள், மிளகாய் கத்திரிச் செடிகள், 440 மைல் (710 கி. மீ.) தொலைவுக்கு (பொருள்களை ஏற்றிச் செல்லும்) இரயில் பாதை, 2 துறைமுகங்கள், 4 விமான நிலையங்கள், 8 சிறைச் சாலைகள், 25 திரைப்பட மாளிகைகள், 20,000 வானொலிக் கருவிகள், 4,500 டெலிபோன், 100 அஞ்சல் நிலையங்கள், 2000-க்கு மேற்பட்ட மக்கள் வாழும் 5 ஊர்கள், 10,000 கார்கள், 1200 வாடகைக் கார்கள், (20 லட்சம் மக்களுள்ள சென்னை நகரில் 2250 வாடகைக் கார்கள்தான் உள்ளன.)

பீஜியில் 514 போலீசுக்காரர் இருக்கின்றனர்.

**இல்லாதவை**

மலேரியா போன்ற கொடிய நோய்கள், புலி, நரி, கரடி, பாம்பு, தேள்.

**நிகழ்பவை**

ஆண்டுதோறும் 2 கொலை, 179 திருமண முறிவு, 600 சிறு திருட்டுக்கள்.

**காணத்தக்கவை**

சந்தைகளில் சப்பாத்தி விற்பனை, சாலையில் செல்லுவோரைக் கடைக்காரர் அழைத்து ஏதாவது வாங்கச் சொல்லும் காட்சி, படகோட்டும் போட்டி, பலவகையான கிளிகள்.

## 11. பிற்சேர்க்கை

ஒரு பீஜிப் பவுன் இந்திய ரூ. 12-க்குச் சமமானது.

இந்தியாவில் பகல் 12 மணியாக இருக்கும்போது பீஜியில் மாலை 6-30 மணியாக இருக்கும்.

சிட்னி (ஆஸ்திரேலியா)–சூவா (பீஜி) 4 நாள் கப்பல் பயணம்; 1743 மைல்.

ஆக்லண்டு (நியுசீலந்து)—சூவா $2\frac{1}{2}$ நாள் பயணம்; 1150 மைல்.

சான் பிரான்சிஸ்கோ (அமெரிக்கா) சூவா 4800 மைல்; 10 நாள் பயணம்.

வாங்கூவர் (கனடா)—சூவா; 5210 மைல்; 12 நாள் பயணம்.

இந்தியாவுக்கும் சூவாவுக்கும் நேரடிக் கப்பல் போக்குவரத்து சில மாதங்களுக்கு ஒரு முறை உண்டு.

சூவாவில் வெப்பம்—

ஆகக் குறைந்தது 60°F

ஆகக் கூடியது 96°F

வேனிற்காலம் : அக்டோபர் முதல் மார்ச் வரை.

இந்நூலிலுள்ள படங்களைத் தந்து உதவிய
'பிரிட்டிஷ் இன்பர்மேசன் சர்விஸ்'
சென்னை அலுவலகத்தினர்க்கு
எம் நன்றி உரியது.

28-29 MAP